
# பூர்விக
# தமிழர் குடி கட்சி

follow up - ptkparty.com

## தமிழர் குடி ஆட்சி அமைப்போம்

## கொள்கைகள்
## PART 1





# விளக்கம்

நமது கட்சியின் கொடி வண்ணம்,
வெள்ளை, சிவப்பு இது சோழர்
கொடியின் வண்ணமாகும்.

வெள்ளை வண்ணம் நமது தமிழர்
குடியின் பண்பாட்டை குறிக்கும்
விதமாக உள்ளது.

சின்னம் நமது பண்டைய
தமிழர்களின் வரலாற்றில் உள்ள
நெற்பயிர் நமது கட்சியின்
சின்னமாகும்.

அன்புடன்
எஸ். பன்னீர் செல்வம்

# பூர்விக தமிழர் குடி கட்சி



**(பண்டைய தமிழர்களின் சரித்திரம்)**


**ஆசிரியர்**

## S. பன்னீர்செல்வம்

**(வில்வாய்ஸ் மற்றும் வில்முரசு நாளிதழ்)**

**(பதிப்பாசிரியர்)**

## S. பன்னீர் செல்வம்

**Address:**

**No:3/5. Muzaffar zung,**
**Bahadhur street , Triplicane**
**Chennai-600005**
**9444250522,8870667840**

# நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | கொள்கைகள் |
| ஆசிரியர் | எஸ்.பன்னீர் செல்வம் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2023 |
| பதிப்பு விவரம் | முதல் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி. கி. |
| நூலின் அளவு | (20×30 cm) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | 68 |
| விலை - | 50/- |
| அட்டைப்பட ஓவியம் | வில்முரசு மீடியா |
| லேசர் வடிவமைப்பு | தேவன் பிரிண்டர்ஸ் |
| அச்சிட்டோர் | தேவன் பிரிண்டர்ஸ் |
| நூல் கட்டுமானம் | தையல் |



# உள்ளே


| | |
|---|---|
| 10 page | சோழர் வேலை திட்டம் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி வழங்குவோம். |
| 21 page | திருச்சியை தமிழ்நாட்டின் தலைநகராக்குவோம் தலைமை செயலகம், அனைத்து அலுவலகங்களும் கொண்டு வருவோம். |
| 31 page | குடும்ப அட்டைக்கு மாதம் 10 லிட்டர் சோமபானம் (அ) கள் இலவசமாக வழங்குவோம். |
| 34 page | பொய் FIR போடுவதற்கு கடிவாளம் போடுவோம், FIR பதிவு செய்ய குழு அமைப்போம். |
| 38 page | சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்போம் மற்றும் அடையாள அட்டை வழங்குவோம். |
| 45 page | மத்திய மாநில அரசு பணியில் தமிழர் குடிகளுக்கு 80% மற் றவர்களுக்கு 20% வேண்டும். |
| 47 page | தமிழ்நாட்டில் வசிக்கும் அனைவருக்கும் அரசு குடியுரிமை அடையாள அட்டை வழங்குவோம். |
| 56 page | கடந்த இருநூறு ஆண்டுகளில் இருந்து நில அபகரிப்பு குறித்து கணக்கேடுப்பு நடத்துவோம். |
| 58 page | பெண் காவலர்களுக்கு எட்டு மணி நேர பணி மற்றும் பகல் பணி மட்டுமே வழங்குவோம். |
| 62 page | மாணவ மாணவியருக்கு கடனில்லா கல்வி வழங்குவோம். |

# பூர்வீக தமிழர் குடி கட்சியின் வழிகாட்டிகள்

## அந்நிய குடி தலைவர்களை வழிகாட்டியாக கருத முடியாது


### சுதந்திரத்திற்கு முன்பு

மன்னர் ராஜராஜ சோழன், மருது பாண்டியர்கள், பெரும்பிடுவது முத்தரையர், தீரன் செங்குட்டுவன், வேலுநாச்சியார்.



### சுதந்திரத்திற்கு பின்பு

ரெட்டமலை சீனிவாசன், அயோத்திய தாசர், காமராஜர், அப்துல்கலாம் தேசிய தலைவர் பிரபாகரன் இவர்கள் வழிகாட்டியாக செயல் படுவோம்.





# முருகன் துதி

மூவிரு முகங்கள் போற்றி!
முகம் பொழி கருணை போற்றி!
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலர்அடி போற்றி! அன்னான்
சேவலும் மயிலும் போற்றி!
திருக்கைவேல் போற்றி! போற்றி!




நமது பூர்வீக கட்சியில்
தமிழ் குடி இன மக்கள்
மட்டுமே சேர முடியும்
பயணிக்க முடியும்.
மாற்று மொழி
தாய் மொழியாக
கொண்டவர்கள்
சேர முடியாது.
என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

# தமிழ்நாடு அரசு ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 14 லட்சம்

TNPSC

Tamil Nadu Public Service Commission

தமிழகத்தில் தற்போது உள்ள தகவல்களின் படி மாநில அரசு ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 14 லட்சம் அல்லது அதற்கு மேல் இருக்கும் என கூறப்படுகிறது. அதாவது தமிழக மக்கள் தொகையில், ஒரு லட்சம் பேருக்கு 1,500 என்ற எண்ணிக்கையில் அரசு பணியாளர்கள் உள்ளனர்.

கடந்த 2018ம் ஆண்டு நிலவரப்படி தமிழக அரசில் 14 லட்சத்து 5 ஆயிரத்து 59 ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 6 லட்சத்து 98 ஆயிரத்து 32 பேர் நிரந்தர ஊழியர்களாகவும், 7 லட்சத்து 7 ஆயிரத்து 27 பேர் தற்காலிக ஊழியர் களாகவும் பணியாற்றி வருகிறார்கள்.

சுமார் 14 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் பென்ஷன்தாரர்களுக்கு ஒரு ஆண்டு மட்டும் 62 ஆயிரத்து 908 கோடி ரூபாய் சம்பளம் மற்றும் ஓய்வூதிமாக வழங்கப்படுகிறது. இது ஒட்டுமொத்த தமிழக அரசு வருமானத்தில் 40 சதவீதம் ஆகும். இந்தியாவிலேயே அரசு ஊழியர்களுக்கு மாநில வருவாயில் அதிக தொகையை வழங்கும் மாநிலங் களில் தமிழ்நாடு 2வது இடத்தில் உள்ளது.

பாதுகாப்பு கருதி முழு விபரத்தை வெளியிட முடியவில்லை




# சோழர் வேலை திட்டம்

## குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி கொள்கை {1}

பூர்வீக தமிழர் குடி கட்சியின் முதல் கொள்கையை பல தமிழ் குடி சொந்தங்களோடு கலந்தாய்வு செய்யப் பட்டு, இப்போது வெளியிடப்படுகிறது.

என் தமிழர் குடி உறவுகள் அனைவரும் இந்த கொள்கையை ஏற்றுக் கொண்டு, ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள் கிறோம்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு கட்டாய அரசு வேலை என்பது தான் சோழர் வேலை திட்டம்.
இது சாத்தியமா? என்றால், சாத்தியம் என்று தான் கூறுவேன். ஏனென்றால், இது குறித்து பல கட்ட ஆய்வுகள் செய்த பின்பு தான் வடிவமைக்கப்பட்டது.

## 0001. (முன்னுரிமை)

சோழர் வேலை திட்டம், அரசு வேலையில் சேரும் நபர்கள் நான் எந்தசாதியும் சேராதவர் என்று சான்றிதழ் பெற்று கொடுப்பவருக்கு வேலையில் முன்னுரிமை வழங்கப்படும்.
இதனால் சாதியை ஒழிக்க முடியும், சமூக நீதியை அடைய முடியும், மன்னர் காலத்தில் சாதிகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## 0002. (முன்னுரிமை)

(சோழர்) அரசு வேலையில் கடந்த மூன்று தலைமுறையாக அரசுவேலை அனுபவிக் காத குடும்பத்திற்கு முன்னுரிமை வழங் கப்படும்.
இதனால் பல குடும்பங்களில் உள்ள வறுமையை ஒழிக்க முடியும். இதற்காக தனிக்குழு அமைத்து கணக்கெடுப்பு நடத் தப்படும்.

அரசு வேலையில் காலம் காலமாக கொல்லை புறவழியாக அரசு வேலையை அபகரித்தவர்களுக்கு ஆப்பு அடிக்க முடி யும் மேலும் குறுக்கு வழியில் அரசு பணி யில் சேர்வதை தடுக்க முடியும்.

## 0003. (முன்னுரிமை)

சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகள் தமிழ் தாய்மொழி மற்றும் இன குடிகளுக்குள் திருமணம் செய்து இருந் தால் முன்னுரிமை வழங்கப்படும்.
இதனால் இனக்குடிகள் அழிவதை தடுக்க முடியும். அழிந்த கூட்டு குடும்பத்தை

மீட்டுக்கொண்டு வர முடியும். தமிழ் மொழியை வளர்க்க முடியும். இந்தி மொழி, ஆங்கில மொழி வளர்ச்சி அடை வதை தடுத்து நிறுத்த முடியும்.

வெளி மாநிலத்தில் உள்ள பெண்களை ஆண்கள் திருமணம் செய் வதை குறைக்க முடியும்.

## கட்டாய கல்வி
## 0004. (முன்னுரிமை)

சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகளின் கல்வித்தகுதி அடிப் படை யில் பணி வழங்கப்படும், குறைந்த படிப்பு பத்தாம் வகுப்பு படித்திருக்க வேண்டும். மேலும், அனைத்து உறவு களும் பன்னிரண்டாம் வகுப்பு வரை படி க்க கட்டாயகல்வித் திட்டத்தை கொண்டு வருவோம்.

## அதிகமாகும் விவாகரத்துக்கள்

0005. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகள் கணவர் அல்லது மனைவி

இதில் ஒருவர் மட்டுமே இந்த திட்டத்தில் சேரமுடியும், இதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட வேண்டும்.
வேலை பெற்றுக்கொண்டு இடையில் விவகாரத்து பெற்று விட்டால் அரசு வேலை காலாவதியாகிவிடும்.

இன்று நூற்றுக்கு எழுபது சதவிகிதத் திருமணங்கள் விவாகரத்தில் முடிகிறது. இதற்கு ஆடம்பரம், வறுமை, ஆணவம் காரணமாக உள்ளது. அதிகாரத்தை இருவருக்கும் பிரித்துக்கொடுத்தால்.
கணவர் மனைவிக்குள் விவகாரத்து மற்றும் மனவருத்தத்தை தடுக்க முடியும்.

0006. சோழர் அரசு வேலையில் பணிபுரியும் போது மரணம் ஏற்பட்டால் உடனடியாக, வேலை தானாகவே அவர் குடும்பத்தில் உள்ள ஒரு வருக்கு சென்றுவிடும்.

0007. சோழர் அரசு வேலையில் உள்ள நமது உறவுகள் தங்களது பெற்றோர் களை பராமரிக்க வேண்டும், பாதுகாப்பு வழங்க வேண்டும்; இல்லையென்றால், புகார்

வரும் பட்சத்தில் உடனடியாக பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

இன்று தெருவுக்குத் தெரு முதியோர் இல் லம் உள்ளது மேலும் ஆதரவற்றோர் இல்லம் குடிசைத்தொழில் போல் பெருகி உள்ளது.

இதனால் முதியோர்கள் ஆதரவற்றோர் இல்லம் தேடி செல்வதை தடுக்க முடியும் மற்றும் முதியோர்களை பசி கொடுமையில் இருந்து பாது காக்க முடியும்.

0008. சோழர் அரசு வேலையில் 24 வயது முதல் பணியில் சேரலாம், இடையில் விருப்ப ஓய்வு பெறலாம். சோழர் அரசு வேலையில் ஓய்வு பெறும் வயது 55 மட்டுமே.

0009. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகள் அவர்கள் படித்த படிப்பை வைத்தே துறைரீதியாக பணிவழங்கப்படும். மேலும் வாரத்தில் ஒரு நாள் பயிற்சிகள் வழங்கப்படும்.

0010. சோழர் அரசு பணியில் சேரும் உறவு

களுக்கு சேமநலநிதி, மருத்துவகாப்பு மற்றும் ஓய்வூதியம் வழங்கப்படும், அதாவது 2005ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த அனைத்து சலுகைகளும் வழங்கப் படும்.

0011. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகளுக்கு சம்பளம் மற்றும் ஏனைய சலுகைகளை வழங்கவும், பணம் பரிவர் த்தனை செய்யவும், தனியாக சோழர் வங்கி என்ற பெயரில் வங்கி ஒன்று உரு வாக்கப்படும் .

0012. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகள் தொடர்ந்து ஒரு அலுவல கத்தில் மூன்று ஆண்டுகள் மட்டுமே பணிபுரிய முடியும் மூன்று ஆண்டுகள் முடிந்ததும் அடுத்த அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப் படுவர்.

0013. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகள் முறைகேடுகள் அலட்சியம் மற்றும் லஞ்சலாவண்யத்தில் ஈடுபட்டால் உடனடியாக தற்காலிக பணியிடை நீக்கம்

செய்யப்படுவார்கள்.

0014. சோழர் அரசு வேலையில் உள்ள உறவுகளுக்கு தமிழர் குடி பண்டிகைக்கு மட்டுமே அரசு விடுமுறையாக இருக்கும், மற்ற பண்டிகைகளுக்கு அரசு விடுமுறை இருக்காது.

மேலும் தமிழர்குடி பண்டிகை சில வற்றை அரசு சேர்க்கும் இதன் மூலம் மேலும் சில பணி நாட்கள் கிடைக்கும்.

0015. சோழர் அரசு வேலையில் பணி புரியும் பெண்களுக்கு மகப்பேறு காலத்தில் குறைந்தபட்சம் 6 மாதம் முதல் 8 மாதங்கள் வரை விடுப்பு வழங்கப்படும். இதற்கு அவர்களின் சம்பளம் மற்றும் சலு கைகள் பறிக்கபடாது. விடுப்பை ரத்து செய்தால் அல்லது துய்க்கவில்லை எனில் தக்க சன்மானம் வழங்கப்படும்.

0016. சோழர் அரசு வேலையில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் கணவன்மார்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ சாதி, மத பிரச்சாரம், மத

பிரச்சனைகள், தீண்டாமை, சாதி கூட்டம், மத கூட்டங்களில் ஈடுபட முடியாது.
இதை மீறும் ஊழியர்கள் முதலில் தற்காலிக பணி நீக்கம் செய்யப் படுவார்கள், பின்பு மூன்று மாதத்தி ற்குள் விசாரணை செய்து உண்மை தன் மையை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

0017. சோழர் அரசு பணியில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் கணவர்களோ, மனைவி மார்களோ சாதி, மத அரசியல் இயக்கத்தில் உறுப்பினராக செயல்படக்கூடாது. மீறி செயல்படுவது நிரூபிக்கப்பட்டால் உடனடியாக அரசு பணியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

0018. சோழர் அரசு வேலையில் பணிபுரியும் உறவுகள் நாட்டின் முன் னேற்றத்திற்காக ஆராய்ச்சியில் ஈடு பட்டால், அதாவது ராமர் பிள்ளை மற்றும் கூகுள் பிச்சை போன்றவர்கள் போல் ஈடுபட்டால் அவர்களுக்கு அரசு

**பக்க பலமாக நின்று கை தூக்கி விடும், இதற்காக அனைத்து சலுகைகளும் வழ ங்கப்படும்.**

**0019. சோழர் அரசு வேலையில் சேரும் உறவுகளுக்கு தமிழில் பெயர் இருந் தால் முன்னுரிமை வழங்கப்படும்.**

**மேலும் தங்களது குழந்தைக்கு தமிழில் பெயர் வைத்தால் அரசு பல சலுகை களை வழங்கும்.**

**தமிழ்நாடு அரசு ஊழியர் நடத்தை விதிகள் (Tamilnadu Government Servants` Conduct Rules) என் பது தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள், ஆசிரியர்கள், சீருடைப்பணி யாளர்கள் மற்றும் அரசு உதவி பெறும் கல்விக்கூட ஆசிரியர்கள் மற்றும், ஊழியர்களின் சட்டபூர்வமான குடும்ப உறுப்பினர்களை வகைப்படுத்தல், அசையும் மற்றும் அசையா சொத்துகள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல், கூட்டுறவு சங்கங்களில் பங் கேற்றல், அரசு தொடர்பற்ற தனிப்பட்ட தொழில்**

அல்லது வேலை செய்தல், ஏலச் சீட்டு கட்டுதல், வரதட்சனை, கொடை, பரிசுகள் வாங்குதல், பணியில் இருக்கும் போது உயர்கல்வி பயிலல், வெளிநாடுகளுக்குச் செல்ல கடவுச்சீட்டு வாங்குதல்,

[1]. அலுவல் நேரங்களில் ஆர்ப்பாட்டம் **(Demonstration)** செய்தல், சங்க சந்தா வசூலித்தல், முதலீடுகள் செய்தல் மற்றும் கடன் வாங்குதல்; கொடுத்தல், வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்தல், அரசி யல் கட்சியில் சேர்தல் மற்றும் தேர்தலில் பங்கெடுத்தல், சாதி சங்கங்களில் உறுப் பினராதல், இருதார திருமனம் புரிதல், பாலியல் வநீகொடுமையில் ஈடுபடல், போதை தரும் மருந்துகள்/பானங்கள் அருந்துதல், அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய இறையாண்மைக்கு எதிரான இயக்கங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்தல் போன் றவைகள் குறித்தான நடத்தை விதிகள் விரிவாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் சீருடை பணியாளர்களுக்கு அறி வுறுத்தப்படுகிறது.

# கொள்கை - 2

**திருச்சியை தமிழ்நாட்டின் தலைநகரக்குவோம் தலைமை செயலகம் அனைத்து அலுவலகங்களும் கொண்டு வருவோம்**




**திருச்சிராப்பள்ளியை ஏன் தலைநகரமாகக் கொண்டு வருவோம் என்பதற்கு வரலாற்று சான்றுகள் சாதகமாக உள்ளது.**

இது குறித்து ஒரு விரிவான அலசலை பார்ப்போம்:

வடக்கே சென்னை, தெற்கே கன்னி யாகுமரி, மேற்கே கிருஷ்ணகிரி, கிழக்கே பூம்புகார் இது தான் திருச்சிக்கு அமைந்துள்ள வரலாற்று சுவடுகள் திருச்சிராப்பள்ளியை தலைநகரமாக கொண்டு வர வேண்டிய அவசியம் ஏன்?

தற்போது தமிழ்நாட்டு தலை நகரான சென்னையை பார்ப்போம் சென்னை மண்ணுக்கு சொந்தக்காரர் சென்னப்ப நாயக்கர் என்ற தமிழர் குடி சார்ந்தவர் ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியில் தென் மாநிலமான ஆந்திரா, தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா மற்றும் கேரளா மாநிலத்திற்கு தலை மையாக சென்னை மாற்றினார் பல நூறு ஆண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சி செய்ய உதவியது சென்னை ஆங்கிலேயர்கள் ஆட்சி முடிந்ததும் அப்படியே ஆட்சிகள்

ஆட்சி செய்ய துவங்கினார்கள்.
இதில் பல ஆண்டுகள் ஆங்கிலே யர்கள் மற்றும் ஆரியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இவர் களிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தை பறிக்க நீதி கட்சியை துவங்கினார்.

இந்த நீதி கட்சியில் பார்ப்பனர்கள் அல் லாத தெலுங்கர்கள், சில தமிழர்கள், கன்னடர்கள், மலையாளிகள் என்று அங்கம்வகித்தனர்.

இது சுதந்திரம் அடைவதற்கு முன்பு சென்னாப்பட்டினம், மதராஸ், மதராஸ் மாகாணம், மதராஸ் ராஜஸ்தானி என்று பல பெயர் இருந்து வந்துள்ளது இதனால் மார்வாடிகள் சென்னையில் அதிகமாக குடியேறினார்.

இதனால் கொத்தவால் சாவடி உருவானது, இப்போது கொத்தவால் சாவடி பகுதிகள் முழுவதும் மார்வாடி

கள் கைக்கு போய்விட்டது, அடுத்ததாக ஆரியர்கள் கட்டுப்பாட்டில் இருந்த போது இந்தியாவில் உள்ள ஆரியர்கள் சென்னைக்கு குடியேறினார்கள்.

இதனையடுத்து தெலுங்கர்கள் வசித்த பகுதியில் மேலும், மேலும் தெலுங்கர் குடியேறினார் என்று கொத்தவால் சாவடியில் மார்வாடிகளோடு வியா பாரத்தில் கைகோத்தவர்கள் தெலுங் கர்களே பிற்காலத்தில் இவர்களோடு வியாபாரத்தில் கன்னடர்கள் மலை யாளிகள் கைகோர்த்துக் கொண்டனர் நமது தமிழர் குடியான வாணியர் செட்டியார்கள் வியாபாரத்தில் கொடி கட்டி பறந்தனர் இவர்கள் கைகோர்த்ததின் விளைவாக செட்டியார்கள் வியாபாரம் பாடை ஏறியது.

இந்த நிலையில் சுதந்திரம் கிடைத்து மொழிவாரியாக மாநிலம் பிரிக்கப்பட்டது. தமிழ் மொழி இருப்பதால் தமிழ்நாடு என பெயர் சூட்ட வேண்டும் என்று பல

போராட்டங்கள் நடைபெற்றது.

நமது தமிழர் குடியான சங்கரலிங்க நாடார் அவர்கள் 74 நாட்கள் உண் ணாவிரதம் இருந்து தனது உயிரை தியாகம் செய்த தன் விளைவு இவர்தான் தமிழ்நாடு என்று பெயர் வருவதற்கு தந்தையாக செயல்பட்டார். ஆனால் இன்று யாராரோ காரணம் சொல்கிறார்கள் அடுத்தவனுக்கு பிற ந்த பிள்ளையை தனது பிள்ளை என்று பீற்றிக்கொள்கிறார்கள்.

# தமிழ்நாடு என்று

தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண் டும் திராவிட நாடு என்று பெயர் சூட்ட வேண்டும். என்று போராடி யவர்கள் தமிழ்நாடு தலைநகரம் திருச்சிராப்பள்ளியை கொண்டு வர வேண்டும் என்று போராடவில்லை இது பற்றி பேசக்கூடவில்லை.

1985 ஆம் ஆண்டு முதலமைச் சர்ராக இருந்த எம்ஜிஆர் அவர்கள்

திருச்சிராப்பள்ளியை தலைநகரமாகக் கொண்டு வர வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

பின்னாளில் மார்வாடிகள் மலை யாளிகள் (எம்ஜிஆர் மலையாளி) கன் னடர்கள், திராவிட தெலுங்கர்கள், ஒன்று சேர்ந்து இரவோடு இரவாக எம்.ஜி.ஆரை சந்தித்து திருச்சிராப்பள்ளி தலைநகரம் என்ற வார்த்தையை பட்டி பார்த்து பெயிண்ட் அடித்து விட்டார்கள்.

## தமிழன் கையில்

இரவோடு இரவாக அப்படி என்ன தான் எம்.ஜி.ஆர் உடன் இவர்கள் பேசி இருப்பார்கள் என்று பல கட்டமாக ஆய்வு செய்த போது அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கிடைத்தன. சென்னை என்பது வெளிமாநிலத்தில் இருந்து அதாவது வட இந்தியா, கேரளா, கர்நாடகா, ஆந்திராவில், இருந்து குடி யேறுபவர்களின் சொர்க்க பூமியாகவும்

மாமியார் வீடாகவும் பயன்படுத்தி வரு கிறது.

திருச்சியை தலைநகரமாகியனால் மற்ற மாநிலத்தில் இருந்து மக்கள் திருச் சிக்கு குடியேற முடியாது அப்படியே குடியறினாலும் குடியேறும் மக்கள் அடிமையாக தான் இருக்க வேண்டும்.

அதாவது தமிழனுக்கு அடிமையாக இருக்க வேண்டும் குறிப்பாக, தமிழர்கள் கையில் ஆட்சி அதிகாரம் போய்விடும் என்று எம்ஜிஆரை சமா தானப்படுத்தி விட்டார்கள்.

## திருச்சி தலைநகரமானால் தமிழர் குடிமக்கள்

திருச்சியை தலைநகரமாக மாற்றினால் தலைமை செயலகம் முதல் அனைத்து அரசு தலைமை அலுவலகமும்

திருச்சியில் அமையும் இதனால் நமது தமிழருக்கும் மக்களுக்கும் அரசு வேலை மற்றும் அரசு கொண்டு வரும் ஒப்பந்தங்கள் என்று அனைத்தும் கிடைக்கும். வெளிமாநிலத்தில் இருந்து குடியேறியவர்களுக்கு ஒன்றும் கிடைக் காது.

## சென்னை தொழில் நகரம்

சென்னை தொழில் நகரமாக அறி விப்போம் அதே நேரத்தில் அதிகாரம் முழுவதும் திருச்சியில் மட்டுமே இருக்கும் மீண்டும் சென்னையில் தலைமையாக இருக்கும் பட்சத்தில் ஆந்திராவினரே ஆட்சி அதிகாரத்தில் இருப்பார்கள் தமிழர் குடிமக்கள் மீண்டும் அடிமையாகவும் அகதிகள் ஆகவும் இருப்பார்கள் என்பதில் துளி கூட சந்தேகம் இல்லை.

நமது கட்சியை தமிழர் குடிமக்கள் அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்

# தமிழர்களின் பாரம்பரிய கள்ளின் நன்மைகள்

முழு விவரத்தை பார்க்கும் முன்பாக கள்ளின் மகிமையை பார்ப்போம்

தென்னங்கள் குடித்தால்
கன்னங் கதுப் பேறும்!
ஒரு மரத்துக்கள் குடித்தால்
அடி மரமாய் உடம்பு வரும் !
பனை மரத்துக்கள் குடித்தால்
கட வெலும்பும் இரும்பாகும் !

ஆலமரத்துக்கள் குடித்தால்
அலிக்கும் ஆண்மை வரும் !
பொம்மரத்துக்கள் குடித்தால்
பொன்னிறமாய் உடம்பு வரும்.
எம். சியைக் குடித்தால்
எமலோகம் தான் கிடைக்கும் !

மானிட்டர் குடித்தால்
மானம் பறிபோகும் !
கோல்கொண்டா குடித்தால்
குடும்பமே கூறுகெடும் !
ஜின்னைக் குடித்தால்
சீக்கரமே மலடாவாய் !
ரம்மை குடித்தால்
ரத்தம் சுண்டிவிடும் !

கல்யாணி பீர் குடித்தால்
காமாலை வந்து விடும் !
பைவ் தவ்சன் பீர் குடித்தால்
பரிதாபச் சாவு வரும் !
புல்லட் பீர் குடித்தால்
புத்தி பேதலிக்கும் !
கிங் பிசர் பீர் குடித்தால்
கிறு கிறுத்துப் போயலைவாய்
பான் பராக் போட்டால்
பைத்தியம் பிடிக்குமடா!
கஞ்சாக் குடித்தால்
கட்டுடம்பும் மெலியுமடா!
மூக்குப்பொடி போட்டால்
மூளையிலே புற்று வரும் !

# கொள்கைகள் 03
# நம்மாழ்வார் திட்டம்




**தமிழக மக்கள் உபயோகிக்கும் குடும்ப அட்டைக்கு மாதம் 10 லிட்டர் கள்ளு இலவசமாக வழங்குவோம்.**

தமிழகத்தில் உள்ள விவசாய நிலங்களில் துளிர் விட்டு நிற்கும் தென்னை மரம் மற்றும் பனை மரங்களை அரசு குத்த கைக்கு எடுத்து இதில் விளையும் கள்ளு (தீர்த்தம்) கொள்முதல் செய்து ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் 10 லிட்டர் கள்ளு இலவசமாக வழங்குவோம்.

இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் நல்ல பலனை அடைவார்கள் மேலும் தென்னை மரம் மற்றும் பனை மரங்களை வளர்க்க விவசாயிகளுக்கு கடன் உதவிகள் வழங்கப்படும்.

இந்த கடனை கள்ளு கொள்முதல் செய்யும் போது பிடித்தம் செய்யப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகளை வறுமையில் இருந்து காப் பாற்ற முடியும்.

அரசு மதுபான கடையில் கள்ளு விற்பனை செய்வோம். இதற்காக மாவட்டம் தோறும் குளிர்பான கிடங்கு அமைக்கப்படும். இது டாஸ்மாக் கிடங்கில் ஒரு பகுதியாக இரு க்கும். இந்த திட்டத்தின் மூலம் நமது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள்

(அரசு வேலை) கிடைக்கும் மது போதை யில் இருந்து நமது மக்களை காப்பாற்ற முடியும். இந்த திட்டம் அண்டை மாநி லமான கேரளாவில் வெற்றிகரமாக நடை பெற்று வருகின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் தென்னை மரம் மற்றும் பனைமரம் மூலம் கள்ளு இறக்கும் தொழிலாளிகள் மற்றும் இப் பணியை செய்யும் தொழிலாளிகள் அனைவரும் அரசு ஊழியர்களாக அறி விக்கப்படுவார்கள்.
அரசு பணியாளர்கள் வாங்கும் அனை த்து சலுகைகளும் வழங்கப்படும் மரம் ஏறுவதற்கு பத்தாவது படித்த இளைஞர் களுக்கு பயிற்சி அளித்து பணியில் அமர் த்துவோம்.

பனைமரம் மூலம் தயாரிக்கப்படும் வெல்லம், நாட்டு சக்கரை போன்ற அனைத்து பொருட்களையும் அரசு கொள்முதல் செய்து விற்பனை செய்யும் மேலும் ஏற்றுமதி செய்யப்படும் இதனால் அர சுக்கு வருமானம் கிடைக்கும் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

# கொள்கை - 4




## பொய் FIR போடுவதற்கு கழுவாளம் போடுவோம்

சுதந்திரத்திற்கு பின்பு பரவலாக அங்கே இங்கே என்று பொய் வழக்குகள் போடப் பட்டு வந்தன.

தற்போது 100/80% சதவீதம் பொய் வழக்குகள் பிணையப்பட்டு வருகின்றன. இந்த பொய் வழக்கில் பாதிக்கப்படுவது மத்திய தர மற்றும் ஏழைக் குடும் பங்களே இதை மாற்ற வேண்டும். இதற்கு மக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் ஒரு FIR பதிவு செய்ய வேண்டும் என்றால் மூன்று அதிகாரிகள் அமர்ந்து வந்த புகார் மீது போதிய ஆதாரம் மற்றும் சாட்சிகள் என்று அனைத்து விடயங்களையும் தீவிரமாக ஆராய்ந்த பின்பே FIR பதிவு செய் கின்றனர்.

இந்தியாவில் என்ன நடக்கிறது பணம் பதவி மற்றும் அதிகாரம் உள்ளவர் களிடம் அம்பாக உள்ளது.

FIR இவர்கள் எப்போது வேண்டு மானாலும் ஏவி விடுவார்கள். பின்பு அவர் நீதிமன்றம் சென்று ஜாமீன் எடுக்க வேண்டும் பின்பு நான் குற்றமற்றவன்

என்று நீதிமன்றம் மூலம் நிரூபிக்க வேண்டும்.
இதற்கு போக்குவரத்து செலவு வழக்கறிஞர் கட்டணம் உணவு மற்றும் இதர செலவுகள் மற்றும் மன உளைச்சல் பொருளாதாரப் பின்னடைவு என்று பல பிரச்சனைகள் சந்திக்க வேண்டும்.

# FIRக்கு கடிவாளம் போடுவோம்.

நமது கட்சியின் கொள்கையில் காவல் நிலையத்தில் பதியப்படும் FIR ரில் சில மாற்றம் கொண்டு வருவோம்.

FIR பதிவு செய்ய வேண்டும் என்றால் ஆய்வாளர் அல்லது உதவி ஆய்வாளர் கையொப்பம் போட வேண்டும். இந்த முறையை மாற்றுவோம்.

## காவல் நிலையத்தில் FIR

**காவல் நிலையத்தில் வரும் புகார் களை தீவிரமாக விசாரணை செய்து போதிய சாட்சிகள் மற்றும் முகத்தாரம் இரு க்கும் பட்சத்தில்** FIR **பதிவு செய்ய வேண்டும்.**

**இந்த** FIR **பதிவுச் செய்ய காவல் துணை கண்காணிப்பாளர் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் பரிந்துரை கடிதம் இணைக்க வேண் டும்.**

**பின் தான்** FIR **பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டத்தை கொண்டு வருவோம்.**

**மேலும் பொய் வழக்கு என்று நீதி மன்றத்தில் நிருபனமானால்** FIR **பதிவு செய்த அதிகாரிகள் மற்றும் பரிந்துரை செய்த அதிகாரிகளே பொறுப்பாகும் பொய்** FIR **ரால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் இதனால் பொய் வழக்கு போடும் முறை குறைய வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.**

# கொள்கை 5




## சாதி வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்போம் மற்றும் அடையாள அட்டை வழங்குவோம்

பூர்வீக தமிழர் குடி கட்சியின் கொள்கை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டில் சாதி வாரியாக கணக்கெடுப்பு நடத்துவோம் இதற்கான அடையாள அட்டையை வழங்குவோம்.

# அடையாள அட்டையில் பொருத்தப்படும் விடயங்கள்

பெயர் முகவரி தந்தை பெயர், தாயார் பெயர், கூட பிறந்தவர் பெயர், உறவின் முறை, தாய் மொழி, சாதி, பட்டம், மதம், குலதெய்வம், பூர்வீக குடி, வந்தார் குடி, பூர்வீக ஊர், இரத்த வகை ஆகியவை பொருத்தப்படும் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை புகைப்படத்தை மாற்றிக் கொள் ளும் வசதி அதாவது ஆதார் அட்டை போல் செயல்படுத்தலாம்.

# தேவை இல்லை

பொதுமக்கள் முகவரி சான்றிதழ், வாரிசு சான்றிதழ், சாதி சான்றிதழ், அரசிடமிருந்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை இந்த அடையாள அட்டையை பயன்படுத்திக் கொ ள்ளலாம்.

# வெளிமாநிலங்களில் இருந்து

இந்தியாவில் பிறந்த எவரும் விருப் பப்பட்ட மாநிலத்தில் குடியேறலாம் என்ற சட்டம் உள்ளது. இதை பயன் படுத்தி அண்டை மாநிலமான கேர ளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களில் இருந்து தினந்தோறும் ஏராளமான குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியேறி வருகின்றன.

இதனால் தமிழகத்தில் வந்தால் குடி மக்களின் தொகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. மேலும் தமிழக அரசின் குடும்ப அட்டை பெற்று வருகின்றனர். இதனால் நிரந் தரமாக இங்கே தங்கிவிடுகின்றனர். காலப்போக்கில் வாக்காளர் அடை யாள, ஆதார் அட்டை பெற்றுக் கொண்டு வருகின்றனர். இதனால் நமது தமிழர் குடி வாக்குகளை விட இவர்கள் வாக்கு கூடுதலாகி றது. இதனால் தமிழகத்தில் ஆட்சி

அதிகாரம் நமது கையை விட்டுப் போகும் நிலை உருவாகி வருகிறது இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## VAO சான்றிதழ் அவசியம் தேவை

தமிழகம் தவிர வேறு மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டில் குடும்பத்துடன் குடியெறும்போது குடியிருப்பவர்கள் தங்கள் வசித்த பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து நன்னடத்தை சான்றிதழ் பெற்று வர வேண்டும் இந்த சான்றி தழை வைத்து குடியேறும் பகுதியில் உள்ள கிராம நிர்வாக அதிகாரிகளிடம் கொடுத்தும் தங்கு முகவரியின் கொடுத்தும் மனு வழங்க வேண்டும்.

மனுவை பெற்ற VAO விசாரணை செய்து ரசீது வழங்குவார் இந்த ரசீதுவை நகல் எடுத்து தங்கும் பகுதியில் உள்ள காவல் ஆய்வாளரிடம் மனு கொடுத்து தற்காலிக சான்றிதழ் பெற்ற பின்பு

தமிழகத்தில் குடி ஏற முடியும். இதனால் ,வேறு மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் குடியேறும் மக்களின் பின்னணி என்ன இவர்கள் மீது வழக்கு உள்ளதா? போன்று விவரங்கள் தெரியவரும்.

தமிழகத்தில் இவர்கள் குற்ற செயலில் ஈடுபட்டால் உடனடியாக கைது செய்ய முடியும். குற்றங்கள் குறைவதற்காக வாய்ப்புகள் உள்ளன.

## ஆய்வாளர் வேலை

வெளிமாநிலத்தில் இருந்து குடியேறும் மக்கள் வழங்கும் நன்னடத்தை சான் றிதழ் குறித்து காவல் ஆய்வாளர் அம்மாநிலத்தில் உள்ள காவல் ஆய் வாளர்களுக்கு கடிதம் எழுதி விசாரணை செய்ய வேண்டும், இதனால் போலி சான் றிதழ் பிரச்சனை வராது.

## இதற்குப் பெயர் குடி அடையாள அட்டை

இந்த அட்டை இருந்தால் மட்டுமே வீடு

நிலம் வீட்டு மனைகள் கடைகள் வணிக வளாகம் வாங்க முடியும் இல்லையென் றால் பத்திரப்பதிவு செய்ய முடியாது மின் இணைப்பு குடும்ப அட்டை பெற முடியாது வெளிமாநிலம் மற்றும் வெளிநாட்டை சேர்ந்த நிறுவனங்கள் அறக்கட்டளைகள் தமிழ்நாட்டில் சொத்து வாங்கினால் அதில் தமிழர் குடியை சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்க வேண்டும். (2) 50 சதவீத முத்திரைதாள் கட்டணம் கட்ட வேண்டும்.

## பத்து ஆண்டுகள்

வெளிமாநிலத்தில் இருந்து குடி யேறு பவர் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தமிழகத்தில் வசித்து இருக்க வேண் டும் தங்கள் மீது எந்த விதமான வழக்கும் இல்லை என்ற சான்றிதழ் வழங்க வேண்டும் இதன் பின்பே குடி அடையாள அட்டை வழங்கப்படும்.

## கட்டாயம் தமிழ்

வெளிமாநிலத்தில் இருந்து குடியேறு

பவர்கள் தங்கள் குழந்தைகளை கட்டாயம் தமிழில் படிக்கவைக்க வேண்டும் வெளிமாநிலத்தில் இருந்து குடியேறுபவர் தங்கள் குலதெய்வம் சாதி சங்கங்கள் என்ற பெயரில் கோயில் எதையும் நடத்தக்கூடாது.

தமிழகத்தில் ஊழல் கொள்கை அமைத்த ஆந்திரா, வட மாநிலங்களில் சொத்து வாங்கி சேருவீர்கள் மற்றும் அதே அந்த மாநிலத்தின் கொள்கை அமைத்து ஊழல் செய்து தமிழகத்தில் ஒன்று சொத்துகளை வாங்கி போடுவீர்கள் இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

# VAO கடிதம்

VAO பரிந்துரை கடிதம் இல்லாமல் வெளி மாநிலத்தவர்களுக்கு கடை அலுவலகம் வீடுகள் வாடகைக்கு கொடுக்கக்கூடாது மீறி கொடுத்தால் பின்னால் வரும் பிரச்சனைக்கு உரிமை யாளர்களே பொறுப்பாவார்கள்.

# கொள்கைகள் 06




## மத்திய மாநில அரசு பணியில் தமிழர் குடிகளுக்கு 80% மற் றவர்களுக்கு 20% வேண்டும்

**தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் உள்ள அரசு பணியை தமிழர் குடி மக்களுக்கு 80% சதவீதமும் குடி மக்களுக்கு 20% மத்திய அரசு ஒதுக்க வேண்டும்.**

**இது இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.**

**உதாரணமாக மகாராஷ்டிராவில் மராட் டியர்களுக்கு 80% மற்றவர்களுக்கு 20% பொருந்தும்.**

ஆனால் மத்திய அரசு இந்த மாநில மக்களுக்கு வேலை வாய்ப்பு முன்னுரிமை வழங்காமல். வேறு வேறு மாநிலத்தில் உள்ளவர்களை வேறு வேறு மாநிலங் களுக்கு பணியாற்ற வைக்கிறது.
இதனால் பூர்விக குடிகள் தங்கள் மாநி லத்திற்கு உள்ள உரிமைகளை இழுந்து வருகிறார்கள் மத்திய அரசு உடனடியாக இதற்கான சட்டத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்

இதே போல் தமிழகத்தில் தமிழக அரசு பணியில் தமிழர் குடிகளுக்கு 80 சதவீத அரசு பணியையும் மற்ற சமூகத்தினருக்கு 20% அரசு பணியும் வழங்கும் வகை செய்யும் மசோதாவை சட்ட சபையில் இயற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் இப்படி செய்தால் மட்டுமே அந்தந்த மாநில மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் பொருளாதாரத்தில் முன்னேறுவார்கள் ஆனால் இவர்கள் இதை செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறோம் இது எங்கள் கட்சியின் முக்கிய கொள்கையாகும்.

# தமிழ்நாடு அரசு குடியுரிமை அடையாள அட்டை




குடியுரிமை அடையாள அட்டை வழங்குவோம். இது சாத்தியமா என்றால் சாத்தியமே என்று கூறு வேன் தனி மனித மாற்றமே நாட்டின் மாற்றம்

என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்ட பரம்பரை என்று மார்தட்டுகிறோம். மீசையை முறுக்குகிறோம். எந்த ஆண்டு நாம் ஆண்டோம், இவ்வளவு ஆண்டுகள் நாம் ஏன் ஆளவில்லை. என்ன செய்து கொண்டிருந் தோம் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நாம் நாட்டை ஆளும் போது தமிழின குடி களாக இனகுடிகளாக வாழ்ந்தோம்.

இன குடிகளாக இருந்த நம் மக்களை சாதி வாரியாக பிரித்தது யார்? அதே சாதியை வைத்து கலவரத்தை தூண்டியது யார்? நம் தமிழ் குடி சாதி மக்கள் மீது வன்மத்தை தூண்டியது யார்?

நமது மக்கள் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தை தவறாக பயன்படுத்தி வழக்கு போட்டு சித்திரவதை செய்து யார்? 1947 முதல் 2021 வரை பதிவு செய்யப்பட்ட வன்கொடுமை தடுப்பு வழக்குகளை மொத்தமாக விசாரணை செய்ய கமிஷன் வைப்போம்.

தமிழ்நாட்டில் தான் 600 சாதிகளுக்கும் மேல் உள்ளது, இதில் தமிழ் சாதிகள் 210 வரை மட்டுமே மீதி எல்லாம் நாட்டுக்கு பிழைக்க வந்த சாதி மக்களே, இவர்களால் நமக்குகிடைக்க வேண்டிய படிப்பு பொருளாதாரம் வேவைாய்ப்பு

மற்றும் பல சலுகைகளை இழந்துள்ளோம், தமிழ்நாட்டில் வசிக்கும் தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள், மற்றும் வட நாட்டவர்கள் எங்களுக்கு எதிரிகள் இல்லை. உங்களை சகோதரர்களாக ஏற்றுக் கொண்டோம், ஆனால் நீங்கள் கூட இருந்து கொண்டே எங்கள் முதுகில் குத்தி விட்டீர்கள், ஏமாற்றி விட்டீர்கள்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பட்டியலில் தெலுங்கர்கள் கன்னடர்கள் மலையாளிகள் மற்றும் வட நாட்டவர்கள் என்று மொத்தமாக பார்த்தால் 70% முதல் 80% பணி யாளர்கள் வேலையில் உள்ளார்கள்.

என் பூர்வீக தமிழ் குடி மக்கள் 25% முதல் 30% வரை உள்ளார்கள்.
ஒரு நாட்டில் பிழைக்க வந்தவர்களுக்கு எப்படி இவ்வளவு சலுகைகள் வழங்கப்பட்டது.

இதோ இங்கே நான் சவால் விடுகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 1947 ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு அரசு ஊழியர்களை சாதி வாரியாக கணக் கெடுப்பு நடத்துவோம் எப்படி வேலைக்கு சேர்ந்தீர்கள் என்பதை விசாரணை கமிஷன் வைத்து நடவடிக்கை எடுப்போம்.

விசாரணை கமிஷன் என்றால் ரே கமிஷனாக, சர்க்காரியா கமிஷன்னாகவோ, ஜல்லிக்கட்டு கமிஷன்னாகவோ, தூத்துக்குடி கலவர கமி ஷனாகவோ, ஆறுமுக சாமி கமிஷன்னாகவோ இருக்காது இது வேற மாதிரி கமிஷனாக இருக் கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு தான் எங்கள் கட்சி சாதி மத வாரியாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி வெளி யிடு என்று போராடி வருகிறோம். ஏன் நடத்த மறுக்கிறீர்கள்?
உங்கள் சாயம் வெளுத்து வெளிச்சத்துக்கு வந்து விடும் என்று பயமா?

தமிழ்நாட்டில், திராவிடம் என்ற பெயரில் கரு ப்பு சட்டை அணிந்த காக்கை கூட்டம்.

சமூக நீதி, சாதி ஒழிப்பு, சாதிகள் இல்லை, சாதிகள் அழிக்கப்படவேண்டும் போராடுகிறார் கள் இவர்களைப் பார்த்து கேட்கிறேன்.

அந்த 60 ஆண்டு காலமாக எத்தனை சாதிகளை அழித்தார்கள் என்பதை பட்டியல் தரமுடியுமா?

சமூக நீதி உங்களது வீட்டில் நடைமுறையில்

உள்ளது என்று சான்றிதழ் பெற முடியுமா?

சமீபத்தில் திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரு பெண் நானும் என் கணவரும் எந்த சாதியும் சாராதவர்கள் என்று சான்றிதழ் பெற்றுள்ளார். இந்த பெண் போல உங்கள் வீட்டில் உள்ள மகன், மகளுக்கு வாங்கிக்கொள்ளுங்கள்.
பின்பு வாருங்கள் சமூக நீதி, சாதி ஒழிப்பு, என்ற வசனத்தை பேசுங்கள்.

முன்னாள் முதல்வர் எடப்பாடி அவர்களே, இப்போதைய முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களே, மற்றும் சட்ட மன்ற உறுப்பினகளே, பாராளுமன்ற உறுப்பினர் களே அமைச்சர் பெருமக்களே தமிழ்நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு உள்ளது என்று தெரியுமா?
இந்த மக்கள் தொகையில் பூர்வீக தமிழ் இன குடி மக்களின் தொகை எவ்வளவு என்று தெரியுமா?
பிழைக்க வந்த இன குடி மக்களின் தொகை எவ்வளவு என்று தெரியுமா?

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் மக்கள் தொகை எவ்வளவு என்று கணக்கெடுப்பு பட்டியல் இருக்கும்போது, ஒரு நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு பட்டியல் இருக்கனுமா?

இல்லையா?

தமிழ்நாட்டில் பிழைக்க வந்தவர்கள் கூறுபோட்டு கொண்டால் நாம் எங்கே போவது, என் இனம் எங்கே போவது? இதோ எங்கள் கட்சியின் கொள்கை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனை வருக்கும் தமிழ்நாடு அரசு குடியுரிமை அடையாள அட்டை வழங்குவோம். இந்த அட்டையில் என் னென்ன பொருத்துவோம் என்பதை கீழ் காணும் பட்டியலில் பார்ப்போம்.

1. தமிழகத்தில் வசிக்கும் அனைத்து தரப்பு மக் களையும் சாதி, மத வாரியாக கணக்கெடுப்பு நடத்துவோம்.

2. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு மூல மாக குடியுரிமை அடையாள அட்டை வழங் குவோம்.

3. இந்த குடியுரிமை அடையாள அட்டையில் முகவரி, பெயர், தந்தை பெயர், தாயார் பெயர், கணவர் பெயர், மனைவி பெயர், சாதி, மதம், இனம், தாய் மொழி, இரத்த வகைகள், ஓட்டுனர் உரிமம், ரேஷன் அட்டை எண், ஆதார் அட்டை எண், இன்சூரன்ஸ் பாலிசி எண், பாஸ்போர்ட் எண், அரசு ஊழியர், தனியார் ஊழியர், விவ சாயி, தொழிலாளி, தொழில், வியாபாரம்

போ ன்ற அனைத்து தகவல்களையும் பொருத்துவோம்.

4. இந்த குடியுரிமை அடையாள அட்டைக்கு பின்பு சாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பிறப்பு சான்றிதழ் பெறத் தேவையில்லை.

5. ஓட்டுனர் உரிமம் தவறிவிட்டால் மீண்டும் இதை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுக்க தேவைவில்லை. சான்றிதழ்களை பெறுவதற்கு அரசு அலுவலர்களுக்கு போக வேண்டியது இல்லை. இதனால் லஞ்சம் கொடு ப்பது மிச்சமாகும்.

6. நமது இன குடிமக்களுக்கு வீட்டுக்கு ஒரு வருக்கு அரசுவேலை வாய்ப்பு வழங்குவோம்.

7. இந்த அடையாள வைத்து வெளிமாநி லத்தை பூர்வீகமாக கொண்டவர்கள் தமிழ் நாட்டில் குடியேறியவர்கள் மற்றும் இனிமேல் குடியேறுபவர்கள் ஒரு நாட்டில் வீடு, நிலம் வாங்க சிறப்பு சட்டம் கொண்டு வருவோம்.
ஏன், சி, ஏ, சட்டத்தை அமுல்படுத்துவதில் மத் திய அரசு பின் வாங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தை மாநில அரசுகளிடம் விட்டு விட வேண்டும்.

திட்டத்தை கண்காணிக்கும் பொறுப்பை மத்திய அரசு கையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
வட்டார போக்குவரத்துத்துறை மத்திய அரசு கட்டுப்பாட்டில் உள்ளது.

மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த துறையில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு மாநில அரசு சம்பளம் வழங்கி வருகிறது, மத் திய அரசு வேலையை வாங்கி வருகிறது, இது சாத்தியப்படும் போது குடியுரிமைச் சட்டம் மட் டும் ஏன் சாத்தியப்படாது.
அனைவருக்கும் அந்த அந்த மாநில அரசு குடியுரிமை அடையாள அட்டை வழங்க இதற் கான திட்டத்தை மத்திய அரசு பாராளுமன் றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும்.

தில்லு முல்லு நடைபெற்றால் இதை விசாரிக்கும் அதிகாரம் சிபிஐக்கு மட்டுமே என்று மத்திய அரசு பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும். மாநில அரசுகளின் குடியுரிமை அடையாள அட்டை இல்லாதவர்கள் அந்தந்த மாநிலத்தில் நிலம் மற்றும் வீடுகள் பத்திரப்பதிவு செய்ய முடியாது என்ற திட்டத்தை இணைக்க வேண்டும்.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத் துக்கு குடிபெயரும் போது குடி பெயரும் மாநி

லத்தில் உள்ள மாவட்டத்தின் காவல்துறை கண் காணிப்பாளரிடம் நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றுக்கொண்டு குடியேறும் மாநிலத்தில் உள்ள மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் நன்னடத்தை சான்றிதழை பதிய வேண்டும்.

பின்பு காவல்துறை கண்காணிப்பாளர் அதற்கான மனுரசீதுவை கொடுப்பார் மனு ரசீதுவை வைத்துக்கொண்டு தான் குடியேறும் மாநிலத்தில் வீடு கடை வர்த்தக நிறுவனங்கள் நடத்த முடியும் என்ற விடயத்தை இணைக்க வேண்டும்.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத் துக்கு குடியேறும் நபர்கள் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் வசித்து இருக்க வேண்டும், மேலும் இவர்கள் மீது வழக்கு இருக்கக்கூடாது, பின்பு அந்த மாநில அரசு குடி உரிமை அடையாள அட்டை வழங்க வேண்டும்.

மாநில அரசு குடியுரிமை இல்லாமல் மாநில அரசு இட ஒதுக்கீடு பட்டியலில் இவர்களை இணைக்ககூடாது.

மேலும், அரசு வேலைக்கு மனு கூட போட முடியாதவாறு சட்டம் கொண்டுவரவேண்டும்.
இத்திட்டத்தை அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# கொள்கை - 8




## கடந்த இருநூறு ஆண்டுகளில் இருந்து நில அபகரிப்பு குறித்து கணக்கேடுப்பு நடத்துவோம்

தமிழ்நாட்டில் உள்ள வீடுகள் மற்றும் நிலங்கள் குறித்து கடந்த இருநூறு ஆண்டுகளில் இருந்து நில அளவு எடுப்போம். மற்றும் கணக்கு எடுப் போம் இந்த கணக்கெடுப்பு தேவையா என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாட்டுக்கு மக்கள் தொகை யும் நில கணக்கு தொகையும் முக்கியமாக தேவையாகும். இந்த கணக்கெடுப்பு

மூலம் பல உண்மைகள் வெளியே கொண்டு வருவோம்.

1. பஞ்சமி நிலம் அரசு புறம்போக்கு நிலம் கோயில் நிலம், வக்பு வாரியநிலம் தேவாலய நிலம் எவ்வளவு உள்ளது என்ற புள்ளி விவரம் கிடைக்கும் இதை வைத்து அந்த நில உரிமை யாளர்களிடம் நிலத்தை வழங்குவோம்.

2. முழு சர்வே செய்து எல்லைகள் பொருத்தி நில உரிமையாளர்களுக்கு சிக்கல் இல்லாமல் ஒப்படைப்போம்.

3. விவசாய பூமி, மானாவாரி பூமி, தரிசு பூமி, புஞ்சை பூமி வீட்டு மனைகள் எவ்வளவு இருந்தது இப்போது எவ்வளவு உள்ளது என்ற புள்ளி விவ ரங்கள் கிடைக்கும்.

4. தமிழர் குடி மக்களிடம் எவ்வளவு நிலம் இருந்தது இப்போது எவ்வளவு நிலம் உள்ளது. வந்தார் குடி மக்களிடம் எவ்வளவு நிலம் இரு ந்தது, இப்போது எவ்வளவு உள்ளது என்ற புள்ளிவிவரம் தெரியவரும். இதன் மூலம் மேலும் நமது மண்ணை விலைபோகாமல் காப்பாற்ற முடியும். இதை செய்யவில்லை என்றால் வந்த குடிகள் நமது மண்ணை சூறையாடி விடுவார்கள். பின்பு நமது தமிழர் குடி மக்கள் நிலம், வீடு இல்லாமல் திருவோடு தூக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

# பெண் காவலர்களுக்கு

### எட்டு மணி நேர பணி
### மற்றும் பகல் பணி
### மட்டுமே

## கொள்கை 9




நமது பூர்வீக தமிழர் குடி கட்சியின் ஐந்தாவது கொள்கை என்னவென்றால் தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் நமது வீட்டு பெண்கள் மீது திராவிட

அரசுகள் பலமுறை தாக்குதல் நடத்தி வரு கிறது.

## இது எப்படி என்று பார்ப்போம்:

பெண் காவலர்களை இரவு நேர பணியில் ஈடுபடுத்தி உயர் அதிகாரி மூலம் பாலியல் தொல்லை, செக்ஸ் தொல்லை, மன உளைச்சல் என்று அனைத்து விதமான தொல்லைகளையும் கொடுத்து வருகிறது.

இதனால் மனம் உடைந்து போன நமது பெண்கள் தற்கொலை செய்து கொள் கிறார்கள் தாய், தந்தை, கணவர் மற்றும் குழந்தைகளை கவனிக்க முடியாமல் போகி றது.

இந்த நிலையில் நமது பெண்களை காக்க வேண்டிய கடமையும் பொறு ப்பும் நமக்கு உள்ளது என்பதை மறந்து விட முடியாது இந்த தொல்லைக்கு முடிவு கட்ட திராவிட அரசுகள் முயற்சி செய்யாது.

## திமுக கூட்டத்தில்

சமீபத்தில் நடைபெற்ற திமுக பொதுக் கூட்டத்தில் திமுகவினர் பெண் காவலர் களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தார்

கள் DSP விஷ்ணுபிரியா தற்கொலை என்று தொடர்கிறது.

நமது கட்சியின் முக்கிய கொள்கையாக நமது வீட்டு பெண் காவலர்களுக்கு வழங் கப்படும் பணியில் மாற்றம் செய்ய ஆய்வு செய்தோம். அந்த ஆய்வு அறிக்கையின் பகுதி தான் இது. பெண் காவலர்களுக்கு பகல் நேர பணி மட்டுமே வழங்கப்படும்

பெண் காவலர்களுக்கு 8 மணி நேர பணி வழங்குவோம். பெண் காவலர்களுக்கு காலை 9.30 மணி முதல் மாலை 5:30 மணி வரை மட்டுமே பணியில் அமத்துவோம்

பெண் காவலர்களுக்கு சங்கம் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

காவல் நிலையம் DSP மற்றும் மாவட்ட காவல்துறை அலுவலக பணிகள் மற்றும் அனைத்து அலுவலக பணிகள் முழுவதும் பெண்களே பனிபுரிவார்கள். இதனால், இவர்கள் குடும்பத்தை பார்க்க முடியும் அலு வலகப் பணிகளும் சிறப்பாக செயல் பட முடியும் ஏனென்றால் நமது பெண்கள் பல திறமைசாலிகள்.

# பயன்படுத்த மாட்டோம்

பெண் காவலர்களை அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டம் சாலை மறியல் ஆர்ப்பாட்டம் உயர் அதிகாரிகளின் பாது காப்பு VIPகளுக்கு பாதுகாப்பு அமைச் சர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வழிபாட்டு தல பாதுகாப்பு பணியில் பயன்படுத்த மாட்டோம்

பெண் காவலர்களுக்கு பண்டிகை காலங் களில் விடுமுறை வழங்குவோம். மேலும் அரசு விடுமுறை நாட்களில் விடுமுறை வழங்குவோம் மற்றும் ஞாயிறு அன்று கட்டாய விடுமுறை வழங்குவோம்.



# கொள்கை 10




நமது கட்சியின் ஒன்பதாவது கொள்கை யில் நமது மாணவ மாணவியர்களுக்கு கடன் இல்லா கல்வியை வழங்குவோம்.

இது எப்படி சாத்தியம் என்று பார்ப்போம். இதற்கு முன்பாக தற்போது

கல்வி வியாபாரத்தை பார்ப்போம்.

## LKG யில் ஒரு லட்சம்

இன்று தனியார் பள்ளியில் ஒரு குழந்தையை LKG முதல் UKG யில் சேர்க்க வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ரூபாய். 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை கட்ட வேண்டும். இதே கட்டணம் ஐந்தாம் வகுப்பு வரை கட்ட வேண்டிய கட்டாயத்தில் மக்கள் தள்ளப் பட்டு உள்ளார்.

ஐந்தாம் வகுப்பு முதல் +2 வரை கட்டணம் அப்படியே இரு மடங்கு கட்டி தொலைக்க வேண்டும். அரசு பள்ளியில் குழந்தைகளை படிக்க வைக்க பெற்றோர்கள் 90% முன் வருவது இல்லை.

## உயர்கல்வி முறை

+2 முடித்த கையோடு இன்று பல கல்லூரிகளுக்கு பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பட்டப்படிப்பு படிக்க படியேறி, படியேறி வருவதை நாம் கண் கூடாக பார்க்கிறோம். சில பெற்றோர்

நிலம் நகைகள் கடன் மற்றும் வங்கியில் கடன் வாங்கி படிக்க வைக்கிறார்கள்.

இதில் வங்கியில் வாங்கும் கடன் மாணவ மாணவியரின் தலையில் விழுகிறது. மற்ற கடன் பெற்றோர்கள் தலையில் விழுந்து விடுகிறது. இதில் பெற்றோர்கள் வாங்கும் கடனை பிள் ளைகள் அடைப்பது சந்தேகமே.

குழந்தைகள் படிப்பு முடித்துவிட்டு வெளியே வரும்போது கடனாக தான் வருகின்றனர்கள். இந்த கடன் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக குறைந்த கூலிக்கும் நிரந்தரம் இல்லாத வேலை யை கட்டாயமாக ஏற்றுக் கொண்டு பணி செய்கிறார்கள்.

பின்பு இரண்டு சக்கர வாகனம் கடன் கார் வாஷிங் மெஷின் குளிர்சாதன பெட்டி A/C மற்றும் வீட்டு மனை வீடு கட்டுவதற்கு என்று பல கடனை வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு வருகின்றனர் அதாவது, ஓடிக்கொண்டே இருக்கணும் இடையில் மருத்துவ பிரச்சினை பெற்றோர்கள் பிரச்சினை என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

# இந்த நிலையை மாற்ற வேண்டும்.

நமது மாணவ மாணவிகளை இந்த நிலையில் இருந்து மீட்டுடெடுக்க வேண்டும்.

இதற்காக முதல் கட்டமாக தனியார் பள்ளியில் பாடம் நடத்தும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளை அரசு பள்ளி யில் பணி அமத்துவோம், பின்பு தனி யார் பள்ளியில் நடைபெறும் படிப்பு மற்றும் வீட்டு பாடம் போன்றவற்றை நடைமுறையை கடைபிடிப்போம்.

இதற்காக ஆசிரியர்களுக்கு முழு அதிகாரம் வழங்குவோம் அரசு பள்ளியை தரம் வாரியாக பிரித்து நடைமுறைப் படுத்துவோம்.

# பெற்றோர்கள் ஒழுக்க முக்கியம்

அரசு பள்ளியில் இன்று அரசு பள்ளியில் ஒரு வாத்தியார் தனது மாணவரை தண்டிக்க முடியவில்லை குறிப்பாக

தடியெடுத்த வாத்தியார் காலம் போய் விட்டது. தடியெடுத்த மாணவர்கள் காலம் வந்துவிட்டது.

இதனாலே கல்வி கற்றுக்கொடுக்கும் முறை முற்றிலும் மாறிவிட்டன அரசு பள் ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் நிலைமையை கொஞ்சம் பார்ப்போம்.

ஆசிரியயை மாணவனை காதலிப்பதும், மாணவன் ஆசிரியயை திருமணம் செய் வது மாணவ மாணவியர்கள் மது அருந் துவது, மாணவர்கள் கலவரம் செய்வது, ஆசிரியர்களை கேலி செய்வது, ஆசிரி யர்கள் முன்பாக புகை பிடிப்பது, ஆசிரி யர்களை தாக்குவது என்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனால் மாணவர்களுக்கு தரமான கல்வியை ஆசிரியர்களால் தர முடிவது இல்லை, மேலும் மாணவர்கள் தரமான கல்வி கிடைக்காமல் தவறான வழியில் செல்கின்றனர். இதை எல்லாம் திரா விடம் கற்று தந்தது இதை நாம் மாற்ற வேண்டும். அரசு பள்ளியில் பயிலும்

மாணவ மாணவியர்களுக்கே அரசு பணி யில் முன்னுரிமை அரசு பள்ளியில் ஒண் ணாவது முதல் +2 வரை படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு அரசு பணியில் முன் னுரிமை வழங்கப்படும் மேலும் தாய் மொழி தமிழில் படித்து இருந்தால், மேலும் முன்னுரிமை வழங்கப்படும்.

## பெற்றோர்கள் சந்திப்பு

அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளின் பெற்றோர்களுக்கு மாதத் தில் ஒரு நாள் ஞாயிறு அன்று சிறப்பு பயிற்சி வழங்குவோம். இந்த பயிற்சியில் நல்ல ஒழுக்கம் தீமைகள் குழந்தைகளை வளர்க்கும் முறைகள் மற்றும் பல விடயங் களுக்கு பயிற்சி அளிக்கப்படும் இதில் இருந்து தான் மாணவர்கள் தரம் வாரியாக பிரிக்கப்படும். குறிப்பாக ஒரு மாணவன் நன்றாக படிக்கும் மாணவர்கள் சுமாராக படிக்கும் மாணவர்கள் என்று பிரித்து சுமாராக படிக்கும் மாணவர்களை நன்றாக படிக்க வைக்க பயிற்சி வழங்கப்படும் இப்படி செய்யும் போது கடன் சுமை வராது பெற்றோர்களுக்கு கடன் சுமை இருக்காது



2019 ஆம் ஆண்டு வேலூர், குடும்பத்தில் ஒருவருக்கும் அரசு வேலை என்ற தலைப்பில், தலைவர் SPS உரையாற்றினார் அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம்



2021 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நமது முதல் நூல் வெளியீட்டு விழாவில் தலைப்பாகை அணிந்த நமது தலைவர் SPS அவர்களின் புகைப்படம்